செ.வெ.எண்: 59 நாள்: 23.01.2020

**புதுக்கோட்டை மண்டலத்திலிருந்து இயக்கப்படும் அரசு பேருந்துகளின் இயக்கம் சம்பந்தமான புகார்களை 24 மணி நேரமும் 04322-266111 என்ற தொலைபேசி எண்ணில் தெரிவிக்கலாம்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மண்டலத்திலிருந்து இயக்கப்படும் அரசு பேருந்துகளின் இயக்கம் சம்பந்தமான புகார்களை 24 மணி நேரமும் 04322-266111 என்ற தொலைபேசி எண்ணில் தெரிவிக்கலாம். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி. இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிமிடெட் புதுக்கோட்டை மண்டலத்திலிருந்து இயக்கப்படும் அனைத்து அரசு பேருந்துகளின் இயக்கம் சம்பந்தமான புகார் ஏதேனும் இருப்பின் 24 மணி நேரமும் பொது மக்கள் புகார் தெரிவிக்க ஏதுவாக 04322-266111 என்ற தொலைபேசி எண் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் புகார்களை tnstcpdk@gmail.com என்ற மின் அஞ்சல் மூலமாகவும் பொது மக்கள் தெரிவிக்கலாம். புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**